අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා
වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and vocational Education

**கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை - 2025(2026)**
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( සාමාන්‍ය පෙළ ) විභාගය
General Certificate of Education (Ord. Level) Examination

# வரலாறு
# History - ඉතිහාසය

**பயிற்சி வினாத்தாள்**
අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
**Practice Paper**



**Question Paper – I ,II** வினாத்தாள் - **I,II** (தமிழ் மொழி)

**අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යංශය**
**ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව**
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education

| 33 | T | I |
|---|---|---|

ඉතිහාසය I
வரலாறு I
History I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( සාමාන්‍ය පෙළ ) විභාගය - 2025 (2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
General Certificate of Education (Ord, Level) Examination

පැය එකයි.
ஒரு மணித்தியாலம்
One Hours

அறிவுறுத்தல்கள்:

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கீழே தரப்பட்டுள்ள நூல்களுள் தீபவம்சம் எழுதப்படுவதற்கு மூலாதாரமாக அமைந்த நூல் எது?
(1) வம்சத்தபகாசினி (2) போதிவம்சம்
(3) வினய அட்டகதா (4) ராஜாவலிய

2. கருங்கல், களிமண் தட்டு, செப்பு தகடு, பொன் தகடு, மரப்பலகை ஆகியவற்றின் மீது எழுதப்பட்ட ஆவணங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்.
(1) சுவர்க்கல்வெட்டு (2) குன்றுக்கல்வெட்டு (3) குகைக்கல்வெட்டு (4) சாசனங்கள்

3. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நாட்டின் உட்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் சிப்பிகளை உட்கொண்டமைக்கான காரணம்.
(1) அப்பிரதேசங்களில் அதிகம் கிடைக்கப்பெற்றமை
(2) உப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக
(3) போசனை மிக்க உணவாக இருந்தமை
(4) இலகுவாக பெற்றுக்கொள்ள முடிந்தமை

4. வளமான செங்கபில நிற மண் காணப்படும் காலநிலை வலயம் எது?
(1) தாழ்நில உலர் வலயம் (2) அரை வறல் வலயம்
(3) ஈர வலயம் (4) மலைநாட்டு இடை உலர் வலயம்

5. குலம் எனும் சமுக அமைப்பில் பிரதானியாக விளங்கியவர்
(1) இல்லத்தலைவன் (2) குலபதி
(3) கமிக (4) பருமக

- **கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து விளங்கி வினா இல 6,7 ஆகியவற்றிற்கு விடையளிக்குக.**

**A.** **பொது நிகழ்வுகளின் போது கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்**
**B.** **குளத்தொகுதியொன்றில் வாழும் மக்களின் நலன் கருதி தீர்மானமெடுத்தல்**
**C.** **படகு துறைகளில் வரி அறவிடல் மற்றும் சொத்துக்களை கொண்டிருத்தல்**
**D.** **இல்லத்தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்படல்**

6. சித்துல்பவ்வ கொரவக்கல பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய விடைத் தொகுதி
(1) AC (2) AD (3) BC (4) CD

7. தம்புள்ளை கண்டலம கொத்கல்கந்த பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய விடைத் தொகுதி

(1) AC (2) AD 3 (3) BC (4) CD

8. முழு உலகிற்கும் அரசன் எனப் பொருள்படும் அரசுரிமை எண்ணக்கரு

(1) தெய்வம் (2) போதிசத்துவர் (3) சக்கரவர்த்தி (4) மலையின் அரசன்

9. கீழே நிரல் I இல் இலங்கையை ஆட்சி செய்த கீர்த்தி மிக்க அரசர்கள் சிலரும் நிரல் II இல் அவர்களுக்கு பின் ஆட்சியுரிமையை பெற்றுக்கொண்டவர்களும் தரப்பட்டுள்ளனர் நிரல் I இற்கு பொருத்தமான வகையில் நிரல் II இனை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையாக அமைவது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. துட்டகைமுனு<br>2. வசபன்<br>3. தாதுசேனன் | A. சத்தாதிஸ்ஸன்<br>B. காசியப்பன்<br>C. காவன்திஸ்ஸன்<br>D. வங்கநாசிக திஸ்ஸன் |

(1) ABD (2) ADB (3) CDB (4) CBD

10. நான்காம் உதய மன்னனின் சொரபொரவாவி தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்

(1) சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் (2) காலசுமன எனும் சந்தை பற்றிய விபரம்
(3) வர்த்தக அமைப்புகள் பற்றிய விபரம் (4) சந்தை வரி அறவீடு பற்றிய விபரம்

11. பண்டைய இலங்கையில் வர்த்தகத்தின் பொருட்டு கிரேக்க மெசிடோனிய பிரதேசங்களிலிருந்து வந்த வர்த்தகர்கள் எப்பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளனர்?

(1) தமெட (2) அயோனியன்கள் (3) ஜாவகர் (4) காம்போஜகர்கள்

12. மடைக்கதவிலிருந்து வெளியேற்றப்படும் நீரை கட்டுப்படுத்துவதற்கு கலிங்கல்தொட்டியினுள் பொருத்தப்பட்டிருந்த கோல்.

(1) வெளிவான் கதவு (2) மதகு (3) தண்ணீர் விளக்கு (4) மொஹூல்

13. பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மிகச்சிறிய அலகு

(1) லாஹ (2) வீஹ (3) குஞ்சா (4) பரமாணு

14. மருத்துவ குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி வகை

(1) யவாகு (2) ஹம்பு (3) எம்புல் ஹம்பு (4) அபு ஹம்புகாடி

15. இந்து சமுத்திரப்பகுதியில் நடைபெற்று வந்த சர்வதேச வர்த்தகம் கி.பி 6 ஆம் நூற்றாண்டின் பின்னர் யாருடைய கைகளுக்கு மாறியது.

(1) ஒல்லாந்தர் (2) ஆங்கிலேயர் (3) போர்த்துக்கேயர் (4) அரேபியர்

16. பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சி தொடர்பில் பொருத்தமற்ற கூற்று

(1) பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சிபீடமேறியமை
(2) அரசவம்சங்களுக்கிடையேயான அதிகாரப் போட்டி
(3) பொருளாதார வீழ்ச்சி
(4) சோழரின் படையெடுப்பு

17. களனி விகாரையை புனர்நிர்மாணம் செய்த ஆட்சியாளர்.

(1) மூன்றாம் விஜயபாகு (2) இரண்டாம் பராக்கிரமபாகு
(3) நான்காம் விஜயபாகு (4) முதலாம் புவனேகபாகு

18. மூன்றாம் விக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் பிரதான அமைச்சராக விளங்கியவர்

(1) தேவபதிராஜ (2) சேனாலங்காதிகார
(3) வீர அழகேஸ்வரன் (4) நிஸ்ஸங்க அழகேஸ்வரன்

19. இரண்டாம் நகராக்க காலப்பகுதியில் எழுதப்பட்ட நூல்கள் சில நிரல் I இலும் அவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களையும் மிகச்சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. சிதத் சங்கராவ<br>2. எழுசதஸ் லக்குன<br>3. தம்பதெனி கத்திகாவத | A. காவிய இலக்கண விதிகள்<br>B. பிக்குகளின் ஒழுக்க நெறி<br>C. இரண்டாம் பராக்கிரமபாகுவின் தினசரி நடவடிக்கைகள்<br>D. சிங்கள இலக்கணம் |

(1) ADC (2) DBC (3) DAB (4) DBA

20. மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக்கலைஞராகவும், கவிஞராகவும், விஞ்ஞானியாகவும், பொறியலாளராகவும் உலகப் புகழ் பெற்ற கலைஞர் யார்?

(1) மைக்கல் ஆஞ்சலோ (2) ரபாயல் (3) லியனாடோ டாவின்சி (4) மெசெக்சியோ

- **கீழே A தொடக்கம் F வரை ஐரோப்பிய கட்டடக்கலையின் பண்புகள் சில தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து விளங்கி வினா இல 21,22 ஆகியவற்றிற்கு விடையளிக்குக.**

**A. வில்வளையக் கூரை**
**B. அரைவட்ட சிகரம்**
**C. வட்டவடிவிலான வில்வளையம்**
**D. நுனிக் கோபுரங்கள்**
**E. உயர்ந்த தூண்கள்**
**F. பிரமிட்வடிவ தூண்கள்**

21. மேலே குறிப்பிடப்பட்டுள்ளனவற்றுள் உரோம கட்டடக் கலையம்சங்களை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி

(1) ADE (2) BCE (3) BDE (4) CEF

22. மேலே குறிப்பிடப்பட்டுள்ளனவற்றுள் மத்திய கால கட்டடக் கலையம்சங்களை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி

(1) ADF (2) ADE (3) BDE (4) CDF

23. கி.பி 1505 இல் போர்த்துக்கேய மன்னனால் கிழக்கு நாடுகளின் இராச பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

(1) பிரான்சிஸ்கோ டி அல்மேடா (2) வாஸ்கொடகாமா
(3) லோரன்சோ டி அல்மேடா (4) லசர்டா

24. பிலிப் த ஒலிவேராவின் தலைமையிலான போர்த்துக்கேய படையால் கைப்பற்றப்பட்ட இராசதானி

(1) யாழ்ப்பாணம் (2) றைகம (3) கோட்டை (4) கண்டி

25. குசுமாசனதேவியை மலைநாட்டின் அரசியாக பெயரிடல் மற்றும் பெரோலோபேஸ் த சூசாவின் மரணம் ஆகியற்றுடன் தொடர்புடைய போர் எது?

(1) முல்லேரியா (2) தந்துறை (3) பலன (4) கன்னொருவை

26. வில்லியம் ஹோக்கின்ஸ் தலைமையிலான கப்பல் குழுவினர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது அங்கிருந்த ஆட்சியாளன்

(1) சாஜஹான் (2) மகா அக்பர் (3) ஔரங்கசீப் (4) ஜஹாங்கீர்

27. கொழும்பு, காலி, கற்பிட்டி, கண்டி ஆகிய பிரதேசங்களில் சமய பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட மிஷனரி இயக்கம் எது?

(1) சேர்ச் (2) லண்டன் (3) வெஸ்லியன் (4) அமெரிக்கன்

28. அநுராதபுரத்தில் உள்ள புனித இடங்களை பாதுகாக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தவர்.

(1) அநகாரிக்க தர்மபால (2) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(3) பியதாஸ சிறிசேன (4) வலிசிங்ஹ ஹரிச்சந்திர

29. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை

(1) சாஹிரா கல்லூரி (2) சைவபிரகாச வித்தியாசாலை
(3) பரமேஸ்வரா கல்லூரி (4) இராமநாதன் இந்து கல்லூரி

30. பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பாதகமான விளைவுகளுள் ஒன்று

(1) ஆங்கில அறிவு பரவலடைந்தமை (2) பாராளுமன்ற ஆட்சி முறை
(3) சுயதேவை பூர்த்தி பொருளாதாரத்தின் வீழ்ச்சி (4) ஏற்றுமதிப் பயிர்கள் அறிமுகம்

- கீழே தரப்பட்டுள்ள A,B கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு வினா இல 31, 32 ஆகிய வினாக்களுக்கு விடை தருக
  A. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு
  B. ஜனாதிபதி தேர்தல்

31. முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதியாக கணிக்கப்பட்டு நடைபெறும் தேர்தல் தொடர்பில்

(1) A,B கூற்றுக்கள் உண்மையானவை (2) A,B கூற்றுக்கள் உண்மையற்றவை
(3) A உண்மையானது B உண்மையற்றது (4) A உண்மையற்றது B உண்மையானது.

32. மக்களிடம் காணப்படும் சட்டத்துறை அதிகாரம் தொடர்பில்

(1) A,B கூற்றுக்கள் உண்மையானவை (2) A,B கூற்றுக்கள் உண்மையற்றவை
(3) A உண்மையானது B உண்மையற்றது (4) A உண்மையற்றது B உண்மையானது.

33. 1972 நிலச்சீர்திருத்த சட்டத்தின் படி தனி நபர் ஒருவர் வைத்திருக்கக் கூடிய காணியின் உச்ச வரம்பு பற்றிய சட்டத்தை நடைமுறைப்படுத்திய பிரதமர்
(1) டட்லி சேனாநாயக்க (2) ஜோன் கொத்தலாவல
(3) ஜே.ஆர். ஜெயவர்தன (4) சிறிமாவோ பண்டாரநாயக்க

34. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஏற்றுமதி பதனிடல் வலயம்

(1) கட்டுநாயக்க (2) ஏக்கல (3) பியகம (4) இரத்மலாணை

35. இலங்கையில் இலவச கல்வியை அறிமுகப்படுத்திய யாப்பு
(1) கோல்புறூக் (2) மனிங் (3) டொனமூர் (4) சோல்பரி

36. முதலாம் உலகப் போரின் முடிவில் அபிசீனியாவை ஆக்கிரமித்த நாடு
(1) ஜப்பான் (2) இத்தாலி (3) ஜேர்மனி (4) பிரான்ஸ்

- **கீழே ABCD என கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் தரப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துகளுக்கிடையேயான தொடர்பினைப் பரிசீலனை செய்து 37 – 40 வரையான வினாக்களுக்கு விடை தருக**

A – 1- ஜேர்மனியை பேரரசாக கட்டியெழுப்புதல்
2- இராணுவ பலத்தை அதிகரித்தல்

B – 1- ஐரோப்பாவில் சர்வாதிகார மன்னராட்சி வீழ்ச்சி கண்டமை
2- முதலாம் உலகப்போர்

C – 1- நாசிச வாதம்
2- யூதர்களை கொன்றொழித்தமை

D – 1- எகிப்திய ஜனாதிபதியின் சமவுடமைவாத பொருளாதாரக் கொள்கை
2- சுயஸ் கால்வாய் நெருக்கடி

37. முதலாவதன் ஒரு பண்பாக இரண்டாவது அமைவதை காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

38. இரண்டாவதன் விளைவாக முதலாவது அமையும் சோடி

(1) A (2) B (3) C (4) D

39. முதலாவதிற்கு இரண்டாவது ஏதுவாக அமையும் சோடி

(1) A (2) B (3) C (4) D

40. முதலாவதின் விளைவாக இரண்டாவது ஏற்படுவதை காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

*****

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational

| 33 | T | II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( සාමාන්‍ය පෙළ ) විභාගය - **2025 (2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை**
General Certificate of Education (Ord, Level) Examination

**ඉතිහාසය II**
வரலாறு II
History II

**පැය තුනයි**
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

- **பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது**
- **பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக**

## பகுதி I

1 (அ) (I) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

**பல்லவங்க, கந்தளாய் குளம், சொரபொரவாவி, மாதுருஓயா, நில்வளா கங்கை, கோட்டை, பூந்தல, கந்தரோடை, மிகிந்தலை, மாத்தளை, லுணுவில, பொல்கொல்லை அணை**

(12 புள்ளிகள்)

(II) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

**கிரேக்கம், பாரசீக குடா, பிலிப்பைன்ஸ் தீவுகள், கொரிய தீபகற்பம், மும்பாய், புளோரன்ஸ்**

(6 புள்ளிகள்)

(ஆ) (I) கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. கல்பொத்த கல்வெட்டை உருவாக்கிய மன்னன் யார்?
B. இலங்கை பற்றிய தகவல்களை உள்ளடக்கிய **"அஜாயிப் அல் ஹிந்த்"** எனும் நூலை எழுதியவர் யார்?
C. கி.பி 1865 ஜோர்ஜ் வோல் தலைமையில் உருவாக்கப்பட்ட அமைப்பின் பெயர் யாது?
D. வளைகுடா நெருக்கடியின் போது ஈராக்கின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளான நாடு எது?

(4 புள்ளிகள்)

- A , B ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்களது விடைத்தாளில் எழுதுக.

ii.

1. உரு A இல் காட்டப்பட்டுள்ள சிலையுடன் தொடர்புடைய மன்னன் யார்?
2. இம் மன்னனது காலத்தில் இலங்கையின் தலை நகரம் எது?
3. இவர் கண்ணாடி மணிகளை எந்நாட்டிலிருந்து கொண்டு வந்தார்?
4. இச்சிலை எவ்விகாரைக்கு அருகில் அமைந்துள்ளது?

(4 புள்ளிகள்)



உரு A

iii.

1. உரு B இல் காட்டப்பட்டுள்ள நபர் யார்?
2. இவரால் உருவாக்கப்பட்ட நாடு எது?
3. மேற்குறிப்பிட்ட நிகழ்வால் பகைமை நாடாக மாறிய நாடு எது?
4. இவரால் உருவாக்கப்பட்ட நாட்டை பேரரசாக மாற்ற முயற்சித்த ஆட்சியாளர் யார்? (4 புள்ளிகள்)



உரு B

## பகுதி II

2 (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த இரணைமடு படிவிற்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந்திருந்த மனித வாழ்விடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் மரணச்சடங்கு முறைகளில் எலும்புகூடுகளுக்கு சிவப்பு நிறம் பூசப்பட்டமையுடன் தொடர்புடைய சான்றுகள் கிடைக்கப்பெற்ற இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட மயான வகைகளில் காணக்கூடிய பொதுப் பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் கட்டமைப்புக்கள் மற்றும் அதன் தன்மைகளை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

3 (i) அரசுக்கு முற்பட்ட காலத்தில் நிர்வாக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருந்த அதிகாரிகள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) இலங்கையில் உள்நாட்டு நிர்வாகத்தை முறையாக மேற்கொள்வதற்கு வசப மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) பண்டைய இலங்கையில் அரசுரிமை கையளிக்கப்பட்ட முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக (5 புள்ளிகள்)

(iv) பண்டைய இலங்கையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட விதங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக (6 புள்ளிகள்)

4 (i) பண்டைய இலங்கையில் பாவனையிலிருந்த வெளிநாட்டு நாணயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையினை முறையே எழுதிக்காட்டுக.

A. அரசனுடன் நெருங்கி செயற்பட்ட அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்.
B. பண்டைய சமுகத்தில் கூலிக்கு பெறப்பட்ட அடிமைகளுக்கு வழங்கப்பட்ட பெயர்
C. முதலாம் விஜயபாகுவிற்கு சிறுபராயத்தில் பாதுகாப்பு வழங்கிய அரச அதிகாரி
D. பண்டைய கல்வெட்டுக்களில் "மாத்ரிக்க" என குறிப்பிடப்பட்டிருப்பது.

(4 புள்ளிகள்)

(iii) பண்டைய சமுக அமைப்பில் காணக்கூடிய தனிநபர் தொடர்பு முறைகளின் தன்மைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பண்டைய சமுக பெண்கள் உயரிய கௌரவத்திற்கு உட்பட்டிருந்தமை பற்றி மூன்று காரணிகளை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

5 (i) கண்டி இராச்சியத்தின் சமகாலத்தில் செயற்பட்ட ஏனைய மூன்று இராச்சியங்களை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சிய காலத்தில் மன்னனால் மாத்திரம் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) ஆட்சி உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதில் முதலாம் விமலதர்மசூரியன் எதிர்கொண்ட சவால்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை வெற்றிகொண்ட விதத்தினை விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தின் நிர்வாக நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

6 (i) சென்னை நிர்வாகத்தின் கீழ் இலங்கையின் கரையோரப்பகுதிகளை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) பிரித்தானியரது கவனம் இலங்கை மீது திரும்பியமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) கி.பி 1797 இல் பிரித்தானியருக்கு எதிரான கரையோரக் கிளர்ச்சியின் பின்னர் மியூரன் ஆணைக்குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கி.பி 1848 இரண்டாம் சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

7 (i) கோல்புறூக் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்றின் தேவை பற்றிய கோரிக்கையொன்றினை முன்வைத்த அமைப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கோல்புறூக் அரசியல் யாப்பின் சட்ட நிர்வாக கழகத்தில் அங்கத்துவம் வகித்த அதிகாரிகள் நால்வரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) டொனமூர் யாப்பின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இலங்கை மூதலாம் குடியரசு யாப்பின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

8 (i) பிரித்தானியாவில் நிலக்கரிப் படிவுகள் அதிகளவில் காணப்படும் பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சி காலப்பகுதியில் பிரித்தானியாவின் நெசவுக் கைத்தொழில் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சியானது உலக அரசியல் துறையில் ஏற்படுத்திய மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

9 (i) அமெரிக்க சுதந்திரப் போரின்போது வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக பிரித்தானிய பிரதமர் ஜோன் கிரன்வில் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

A. அமெரிக்க சுதந்திரப் போரின் போது அமெரிக்க கண்டத்தின் முதலாவது மாநாடு நடைபெற்ற இடம்

B. பிரான்சில் பிரதேச நிர்வாகத்தின் பொருட்டு நியமிக்கப்பட்ட அதிகாரிகள்.

C. **"சட்டத்தின் சாரம்"** எனும் நூலை எழுதியவர்.

D. ரஸ்யாவின் சார் மன்னர்களின் ஆட்சியை நீக்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய தலைவர்


**( ரூசோ, பரீஸ், பிலடெல்பியா, நெப்போலியன் பொனபாட், இன்டென்டன், ஸ்டேட் ஜெனரல், கெரன்ஸ்கி )**

(4 புள்ளிகள்)

(iii) பிரான்சிய புரட்சிக்கு ஏதுவாக அமைந்த பொருளாதார காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளிகள்)

(iv) ரஸ்ய புரட்சியின் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)


N



*****

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා
වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( සාමාන්‍ය පෙළ ) විභාගය - 2025 (2026)
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை - 2025(2026)
General Certificate of Education (Ord. Level ) Examination - 2025(2026)

# வரலாறு
# History - ඉතිහාසය

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය
பயிற்சி வினாத்தாளுக்கான விடைப்பத்திரம்
**Answer sheet for tha Practice Paper**



**Answer Paper – I ,II පිළිතුරු පත්‍රය - I,II (தமிழ் மொழி)**


**අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව**
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and vocational Education
National Languages and Humanities Branch

பகுதி I விடைத்தாள்


| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 2 | 21 | 2 | 31 | 1 |
| 02 | 4 | 12 | 4 | 22 | 1 | 32 | 2 |
| 03 | 2 | 13 | 4 | 23 | 1 | 33 | 4 |
| 04 | 1 | 14 | 3 | 24 | 1 | 34 | 1 |
| 05 | 1 | 15 | 4 | 25 | 2 | 35 | 3 |
| 06 | 2 | 16 | 4 | 26 | 4 | 36 | 2 |
| 07 | 3 | 17 | 1 | 27 | 1 | 37 | 3 |
| 08 | 3 | 18 | 4 | 28 | 4 | 38 | 2 |
| 06 | 2 | 19 | 3 | 29 | 2 | 39 | 1 |
| 10 | 1 | 20 | 3 | 30 | 3 | 40 | 4 |

பகுதி II

1. (அ) (i)



1. (ஆ) (ii)




01 (ஆ) i.

A. கீர்த்தி ஶ்ரீ நிஸ்ஸங்க மல்லன்
B. இபன் சஹ்ரியர்
C. இலங்கையர் சங்கம்
D. குவைட் (4 புள்ளிகள்)

ii 1. பாதிகாபய மன்னன்
2. அநுராதபுரம்
3. உரோம்
4. ருவன்வெலிசாய

(4 புள்ளிகள்)

iii 1. ஓட்டோவொன் பிஸ்மார்க்
2. ஜேர்மனி
3. பிரான்ஸ்
4. இரண்டாம் வில்லியம் / கெய்சர்

(4 புள்ளிகள்)

## பகுதி - ii

02 i. பூந்தலை, மினிஹாகல்கந்தை, பத்திராஜவெல, அலுகல்ல, உடமளல, மாதொட, இரணைமடு (3 புள்ளிகள்)

ii. ராவணா எல்ல, பாகியன்கல (4 புள்ளிகள்)

iii.

- கல்லறை மயானம் - இப்பன்கடுவ, கல்சொஹொான் மயானம், யடிகல் பொத்த
- களிமண் ஓடக்கல்லறை மயானம் - பெரகல, ஹல்துமுல்ல, ரஞ்சாமடம
- பரணி மயானம்

( இவை பற்றி உதாரணங்களுடன் விளக்கியிருத்தல் வேண்டும்.) (5 புள்ளிகள்)

iv.

- சிறிய குளங்களைக் கொண்ட குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டமை. (வாவிகாம….)
- தொழில்கள் அடிப்படையில் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
- செயற்பாடுகள் அடிப்படையில் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
- ஒரு கிராமம் மற்றைய கிராமத்திலிருந்து காடுகளால் பிரிக்கப்பட்டிருந்தமை.
- நகரம் புரம் என வேறுபடுத்தப்பட்டிருந்தமை

(6 புள்ளிகள்)

03 i. இல்லத் தலைவர், கமிக, தசகம் எத்தன், பருமக (3 புள்ளிகள்)

ii.

- மகா வாவிகளை நிர்மாணிக்க ஆரம்பித்தமை
- நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து ஆட்சி நடாத்துதல்.
- விகாரைகளை புனரமைப்பு செய்தமை.
- முறையான வரி அறவீட்டை மேற்கொண்டமை (4 புள்ளிகள்)

iii.

- தந்தையிடமிருந்து மகனுக்கு
  - பண்டுகாபயன் - மூடசிவன்
  - வசபன் - வங்கநாசிகதிஸ்ஸன்
  - காவன்திஸ்ஸன் - துட்டகைமுனு
- சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு
  - துட்டகைமுனு - சத்தாதிஸ்ஸன்
  - தேவநம்பிய திஸ்ஸன் - அவரது சகோதரர்கள் (5 புள்ளிகள்)

iv.

- சேனை பயிர்ச்செய்கை
  - சேனை பயிர்ச்செய்கைக்கான பெயர்கள் (சேன், செஹென், பிடபிம் - அதற்குரிய மூலாதாரங்கள்
  - சேனைச் செய்கை மேற்கொள்ளும் படிமுறைகள்
  - பாதுகாப்பு முறைகள்
  - பயிரிடப்பட்ட பயிர்கள்
  - வரிமுறை
- நெற் பயிர்ச்செய்கை
  - பயிரிடப்பட்ட போகங்கள்
  - தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போகங்கள்
  - மன்னர்கள் நெற் செய்கைக்காக மேற்கொண்ட நீர்பாசன நடவடிக்கைகள்
  - அத்தம் முறை
- மந்தைவளர்ப்பு
  - ஆடு, மாடு, கோழி, வளர்ப்பு, மாடுவளர்ப்போர் தங்கும் கிராமம் கோபாலகம், கோபலர்கள், பால் தரும் பசு கிரிகெரி, பொலன்னறுவை மெதிரிகிரிய எத்வேர மண்டபத்தில் உள்ள நோயாளர்களுக்கு இயற்கையாக மரணித்த ஆடு, கோழிகளினது மாமிசம் வழங்கப்பட்டமை தயிர், பால் என்பன பிரதான உணவாக காணப்பட்டமை

(6 புள்ளிகள்)

04 i. இந்தியா, சீனா, உரோம், அரேபியா (நாணயங்கள்) (3 புள்ளிகள்)

ii.
A. ரதல / தத்கொல் / ரத்கொல் சம்தரு
B. தனக்கீத்ததாச
C. புத்தராஜ / சித்தரும்பி புதல்னா
D. சிறிய கால்வாய்கள் / கால்வாய்கள் (4 புள்ளிகள்)

iii.
- மேலிருந்து கீழ் நோக்கிய அதிகாரம் கொண்டோர்
    - இது நிலைக்குத்தான கட்டமைப்பினை கொண்டது
    - அரசன், அமைச்சர்கள், வேறு அரச அலுவலர்கள் மேலிருந்து கீழ் நோக்கி வரிசைப்படி காணப்படுவர்
- கிடையான கட்டமைப்பு
    - பல நிறுவனங்களின் அதிகாரிகள் ஓரே தரத்தில் காணப்படல்
    - இது கிடையான கட்டமைப்பு எனப்படும்
    - அமைச்சர், சேனாதிபதிகள், பொருளாளர் என்போர் இதில் அடங்குவர் (5 புள்ளிகள்)

iv.
- பெண்கள் தாயாகவும் சகோதரியாகவும் மதிக்கப்பட்டமை - ரசவாஹினி
- அரசியாக காணப்பட்டமை (சூளசீவலிதேவி, லீலாவதி)
- தனது கணவன் தூர நாடொன்றில் வர்த்தகத்தின் பொருட்டு சென்றபோது மூன்று ஆண்டுகள் வரை தனியாக வாழ்ந்தமை – ரசவாஹினி
- கல்வியறிவில் சிறந்து விளங்கியமை – மதுபாசிகா
- சமையல் கலையில் சிறந்து விளங்கியமை – அசோகமாலா
- பிரதேச ஆட்சி மேற்கொண்டமை – பருமகளு சுமனா
- நிலங்களை விகாரைகளுக்கு வழங்கியமை – தலுதா லஷ்மி
- தம்மை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டியமை (6 புள்ளிகள்)

05 i. கோட்டை, யாழ்ப்பாணம், சீத்தாவாக்கை, றைகம் (3 புள்ளிகள்)

ii.
- முக்கிய தலைவர்கள் தொடர்பான வழக்குகள்
- கிளர்ச்சிகள், குழப்பங்கள் தொடர்பான வழக்குகள்
- சூழ்ச்சி தொடர்பான வழக்குகள்
- இராச துரோகத்துடன் தொடர்புபட்ட வழக்குகள் (4 புள்ளிகள்)

iii.
- சட்டபூர்வ ஆட்சி உரிமை இல்லாமை
- போர்த்துக்கேயரின் ஆதிக்கம்
- சீத்தாவாக்கை இராச்சியத்திடமிருந்து பாதுகாப்பு பெறல்
- பௌத்த சமயத்தை எழுச்சியடைய செய்யவேண்டி இருந்தமை
- பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தல் (5 புள்ளிகள்)

iv.
- மாளிகை நிர்வாகம்
    - உணவு, உடை குடிபாணம், ஆபரணம் பாவனைப் பொருட்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் காணப்பட்டமை
    - யானை, குதிரை என்பவற்றுக்கு பொறுப்பான அதிகாரிகள் காணப்பட்டமை

- ரட்டவசம எனும் பிரதேச நிர்வாகம்
    - ரட்டை - 9 திஸாவை – 12
    - ரட்டைகளுக்கு பொறுப்பானவர் ரட்டே மாத்தயா அல்ல ரட்டேரால
    - ரட்டேராலைக்கு கீழ் லியனரால, உண்டியரால காணப்பட்டனர்
    - திஸாவைகளுக்கு பொறுப்பானவர் திஸாவை

- கோறளை, கோறளைபற்று

- வரி வசூலிப்பு
  - மடிகே பத்த - போக்குவரத்துக்கான வரி
  - குருவே பத்த – யானை பிடித்தலுக்கான வரி
  - படஹெல பத்த - வனைதலுக்கான வரி
  - ரதா பத்த - சலவைக்கான வரி
  - ஹெந்த பத்த - நெசவுக்கான வரி

- விகாரைகள், தேவாலயங்களின் நிர்வாகம்
  - விகாரை நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் - மஹாநாயக்க, அனுநாயக்க
  - தலதாமாளிகைக்கு பொறுப்பானவர் - தியவடன நிலமே (6 புள்ளிகள்)

06 i. ரெசிடன்ட், அவுமில்தார்கள், கலெக்டர் (3 புள்ளிகள்)

ii.
- திருகோணமலைத் துறைமுகம்
- அமைவிடம்
- வர்த்தக முக்கியத்துவம் (4 புள்ளிகள்)

iii.
- வரி வசூலிப்பில் ஈடுபட்டுள்ள சென்னை உத்தியோகத்தர்களை திருப்பி அனுப்புதல்
- சுதேச உத்தியோகத்தர்களை வரி வசூலிப்பில் ஈடுபடுத்தல்
- தெங்கு வரி உட்பட புதிய வரிகளை நீக்குதல்
- வரி வசூலிக்கவும் நீதி வழங்கவும் வெவ்வேறு உத்தியோகத்தர்களை நியமித்தல்
- ஒல்லாந்து நீதிமன்ற முறையை மீண்டும் தாபித்தல் (5 புள்ளிகள்)

iv.
- போராட்டம் முறையாக ஒழுங்குபடுத்தாமை
- படைபலம், ஆயுதங்கள் காணப்படாமை
- மலைநாட்டு வீதிகள் தொடர்பில் ஆங்கிலேயருக்கு போதிய அறிவு காணப்பட்டமை
- போராட்ட தலைவர்களின் கைது (6 புள்ளிகள்)

07 i. யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம், கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம்
(3 புள்ளிகள்)

ii.
- குடியேற்ற நாட்டுச் செயலாளர்
- திறைசேரி நாயகம்
- கணக்காளர் நாயகம்
- நில அளவைத் திணைக்களத் தலைவர்
- கொழும்பு சுங்கத் திணைக்களத் தலைவர் (4 புள்ளிகள்)

iii.
- அரசுக்கழகம்
- சர்வசன வாக்குரிமை
- நிருவாகக் குழு முறை
- ஆளுநரும் அரச அதிகாரிகளும் (5 புள்ளிகள்)

iv.
- ஜனாதிபதி பதவி
- தேசிய அரசுப் பேரவை
- பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
- நீதிமன்றம்
- அடிப்படை மனித உரிமைகள் (6 புள்ளிகள்)

## பகுதி III

08 i. லங்காசயர், யோக்சயர், தென்வேல்ஸ் (3 புள்ளிகள்)

ii.

- சந்தை வாய்ப்பு
- பிரித்தானிய நெசவு உற்பத்திகளுக்கு காணப்பட்ட அதிக கேள்வி (இந்தியா)
- இயந்திர கண்டுபிடிப்புக்கள் - இயந்திரங்கள, கண்டுபிடிப்பாளர்கள் இது போன்ற விடைகள் (4 புள்ளிகள்)

iii.

- பணத்தை முதலீடு செய்யக் கூடிய பணக்கார வகுப்பினரும் உழைப்பை விற்கும் ஏழை வகுப்பினரும் தோற்றம் பெற்றனர்
- முதலாளி தொழிலாளி வர்க்க முரண்பாடுகள் ஏற்பட்டன
- தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றன
- வேலைநிறுத்தம்
- தொழிலாளர் உரிமை போராட்டங்கள் உருவாகின
- பொதுவுடமைவாதம், தாராண்மைவாதம் ஆகிய அரசியல் கொள்கைகள் உருவாகின
- அடம்ஸ்மித்தினால் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறை பங்களிப்பை ஊக்குவிக்கும் அரசின் தலையிடா கொள்கை உருவாக்கப்பட்டது.
- குடியேற்றவாத கொள்கை உருவாக்கப்பட்டது (1850) இது உலக மகா யுத்தத்திற்கு காரணமாக அமைந்தது. (5 புள்ளிகள்)

iv.

<u>அரசியல்</u>

- மன்னராட்சி வீழ்சியடைந்தமை
- அரசியல் யாப்பு சீர்த்திருத்தங்கள் அறிமுகமானமை
- பாராளுமன்ற ஆட்சி அறிமுகம்
- கட்சிகள் தோற்றம் பெற்றமை
- உரோமன் டச்சு சட்டம் அறிமுகமானமை
- நீதிமன்ற தொகுதி அறிமுகமானமை

**<u>பொருளாதாரம்</u>**

- வர்த்தகப் பொருளாதார முறை அறிமுகம்
- சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை வீழ்ச்சி
- இலங்கையில் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார முறை அறிமுகம்
- பணப்புழக்கம் அறிமுகம்
- போக்குவரத்து, பெருந்தெருக்கள் அறிமுகம்
- வர்த்தக நகரங்களின் அறிமுகம்
- புதிய வழிகள் மூலம் பணம் சம்பாதிக்கும் மத்தியதர வர்க்கம் தோற்றம்

**<u>சமூகம்</u>**

- சமூகம் அறிவுத்துறையில் உயர்நிலையில் இருந்தது.
- மேற்கத்தேய சிந்தனைகள் இந்நாட்டில் பரவின
- ஐரோப்பிய சமய பிரிவுகள் இங்கு தோன்றின
- மேற்கு நாடுகளின் கல்வி முறை இங்கு அறிமுகமாகியது
- ஐரோப்பிய கட்டிடக்கலை இங்கு அறிமுகம்
- படித்த மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை
- தென்னிந்திய தமிழர்கள் இலங்கை சமூகத்துடன் இணைந்தமை
- மேலைத்தேய கலாசாரம் பரவியமை
- ஆங்கில மொழிமூலமான மேலைத்தேய கல்விமுறை அறிமுகமானமை
- விடுமுறைகால விடுதிகள், இரவு களியாட்ட விடுதி முறைகள் அறிமுகமானமை
- மேலைத்தேய ஆடையணிகள் பழக்கவழக்கங்கள் உருவானமை (6 புள்ளிகள்)

09 i. சீனிச் சட்டம், நாணயச் சட்டம், முத்திரைச் சட்டம் (3 புள்ளிகள்)

ii.

A. பிலடெல்பியா
B. இந்தோனேசியா
C. மொன்டஸ்கியூ
D. கெரென்ஸ்கி (4 புள்ளிகள்)

iii.

- பிரான்சிய புரட்சியின் போது திறைசேறி வெறுமையானது(**<u>அரச குடும்ப ஆடம்பர செலவு, தேவையற்ற யுத்த செலவு இதற்கு காரணமானது</u>**)
    - பிரித்தானிய பிரான்சிய ஏழாண்டு போர்,அமெரிக்க சுதந்திர போருக்கு உதவியமை பொருளாதார வீழ்சிக்கு காரணமானது.
    - பிரான்சில் நிலவிய அதிக வரி சாதாரண மக்கள் 60% வரி செலுத்தினர்
    - டெலி , கெபல் , கெப்பிடேஷன் என மூன்று வரிகள் அறவிடப்பட்டது.
- **டெலி -** பொதுமக்களின் வீடுகள் நிலங்களில் பெறப்பட்ட வரி லியோன்,பாரிஸ் நகரங்களில் இவ்வரி அறவிடப்படவில்லை
- **கெபல்-** உப்பு வரி ஒருவர் ஏழு இறாத்தல் உப்பினை விலை கொடுத்து வாங்கலாம், விலை இடத்திற்கு இடம் மாறுபட்டது இரகசியமாக உப்பினை கொண்டு செல்வோருக்கு சிறைதண்டனை வழங்கப்பட்டது
- **கெப்பிடேஷன்**-1695 கொண்டுவரப்பட்ட அனைவருக்குமான வரி ஆனால் இவ் வரிச்சுமையும் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டது. (5 புள்ளிகள்)

iv.

- **போல்ஷெவிக் அரசு தோற்றம் பெற்றமை**
- **நிலமானிய முறை கீழ் இருந்த தனிப்பட்ட நில உரிமை நீக்கப்பட்டமை**
- **அனைத்துத் தொழிற்சாலைகளும் அரசுரிமையாக்கப்பட்டமை**
- **வங்கி போக்குவரத்து என்பன அரசுரிமையாக்கப்பட்டமை**
- **சோவியத் சமவுடமை குடியரசு உருவானமை**

- **சமவுடைமை கொள்கை தோற்றம் பெற்றமை**
- தனிநபர் தேவையை விட சமூக முன்னேற்றத்திற்கும் சமூகத் தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்குதல்
- சமுதாயத்தில் அநீதியையும் ஏற்றத்தாழ்வினையும் அகற்றுதல்
- சமுதாயத்தில் வகுப்பு பாகுபாடுகளை அகற்றி, அனைவரையும் சகோதரர்களாக எண்ணும் உயர் மானிட சமுாயத்தை கட்டியெழுப்புதல் (6 புள்ளிகள்)

*****